SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

திகதி: 2021-09.03
இலக்கம்: 17

# ஊடக அறிவித்தல்
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

தற்போது இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொண்டுள்ள **அனைத்து விதமான வீசாக்களினதும்** செல்லுபடியாகும் காலம் 2021 **செப்டம்பர் மாதம்** 07 **ஆம் திகதி முதல்** 2021 **ஒக்டோபர் மாதம்** 07 **ஆம் திகதி வரை** 30 நாட்களால் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2021 **மே மாதம்** 11 **ஆம் திகதி முதல்** 2021 **ஒக்டோபர்** 07 **ஆம் திகதி வரையிலான** காலப்பகுதிக்குள் காலாவதியாகும் வீசாக்களுக்கு அக்காலப் பிரிவுக்கான வீசாக் கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்படும் என்பதோடு எந்தவித தண்டப் பணமும் அறவிடப்படமாட்டாது.

## • சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்களுக்கு வீசாவை மேலொப்பமிட்டுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் ;

அதற்கிணங்க, சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்கள் அந்த வீசாக்களை நீடித்துக்கொள்வதற்கான வீசாக் கட்டணங்களை செலுத்துவதற்கும் வீசாவை மேலொப்பமிட்டுக்கொள்வதற்கும் பின்வரும் முறைகளில் ஒரு வழிமுறையைப் பின்பற்ற முடியும்;

1. https://eservices.immigration.gov.lk/vs எனும் இணையத் தளத்திற்குள் பிரவேசித்து ஏற்புடைய கட்டணங்களைச் செலுத்தி இணைய வழியில் வீசாவைப் பெற்றுக்கொள்ளல் அல்லது (இலங்கைக்கு வருகைத்தந்த திகதியிலிருந்து உச்சமாக 09 மாதங்கள் வரை);

2. 2021 **ஒக்டோபர்** 07 **ஆம் திகதிக்கு முன்னர்** நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு உத்தேசிக்குமிடத்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தை விமான நிலையத்தில் செலுத்தி நாட்டிலிருந்து வெளியேறுதல். அல்லது;

3. 2021 **ஒக்டோபர்** 07 **ஆம் திகதிக்கு முன்னர்** பயணத்தடை ஒழுங்குகளைப் பேணி பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை கடவுச் சீட்டில் மேலொப்பமிட்டுக்கொள்ளல்.

## • வதிவிட வீசாக்களை வைத்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல்கள்;

2021 **செப்டம்பர் மாதம்** 07 **ஆம் திகதி முதல்** 2021 **ஒக்டோபர் மாதம்** 07 **ஆம் திகதி வரையிலான** வீசா நீடிப்பு அனைத்து செல்லுபடியாகும் வதிவிட வீசாக்களை வைத்திருப்பவர்களுக்கும் ஏற்புடையதாகும். அத் திகதிக்கு முன்னர் வீசாவை நீடித்துக்கொள்வதற்கு கடமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை 0707101050 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து நாளொன்றையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொண்டு 2021 **ஒக்டோபர் மாதம்** 07 **ஆம்** திகதிக்கு முன்னர் பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை மேலொப்பமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**